## இனிமையான குழந்தைகளே! கள்ளங்கபடமற்ற பாபா, பக்தர்களுக்கு பக்தியின் பலனைக் கொடுக்கவும், அவர்களுக்கு வருவது மற்றும் போவதின் வேறுபாட்டைச் சொல்லி முக்தி ஜீவன் முக்திக்கான ஆஸ்தியை கொடுக்கவும் வந்திருக்கிறார்.

கேள்வி: 21 பிறவிகளுக்கான இராஜ்ய பதவியின் பிராப்தி எந்தக் குழந்தைகளுக்கு ஏற்படுகிறது? பிரஜையாக யார் போகிறார்கள்?

பதில்: யார் நேரடிக் குழந்தையாகி பாபாவிடம் முழுமையிலும் முழுமையாக பலியாகிறார் களோ, அவர்களுக்கு இராஜ்ய பதவியின் பிராப்தி ஏற்படுகிறது. மேலும் யார் மாற்றாந்தாய் குழந்தைகளோ, பலி ஆவதில்லையோ அவர்கள் 21 பிறவிகளுக்கும் பிரஜைகளாகப் போய் விடுகின்றனர். நீங்கள் ஸ்ரீமத்படி நடந்து தன்னுடைய யோக பலத்தின் மூலம் இராஜ்ய திலகத்தைப் பெற்றுக் கொள்கிறீர்கள். இங்கே ஆயுதங்கள் போன்றவற்றின் விசயமே கிடையாது. நீங்கள் புத்தியோகத்தின் பலத்தினால் மாயையை வென்றவர் மற்றும் உலகத்தை வென்றவர் ஆக வேண்டும்

பாடல்: கள்ளங்கபடமற்றவர் தனிப்பட்டவர்.............

ஓம் சாந்தி. பாடலில் என்ன சொல்கிறார்கள் என்று பாருங்கள்! பக்தர்களைப் பாதுகாக்கக் கூடியவர், ஆக பக்தர்கள் ஏதோ ஆபத்தில் வந்திருக்கின்றனர். யார் காப்பாற்றப்படுகிறார்கள்? ஆபத்தில் மாட்டிக் கொண்டவர்கள் காப்பாற்றப்படுகிறார்கள். இந்த பக்தர்களை பாதுகாக்கக் கூடியவர் சிவபாபா ஆவார். பக்தர்களுக்கு பக்தியின் பலன் கண்டிப்பாகக் கிடைக்கிறது. அவர்கள் (முயற்சி) உழைக்கிறார்கள் அல்லவா! முயற்சியின் மூலம் பலன் கிடைக்கிறது என்று சட்டம் சொல்கிறது. இப்போது இந்த உலகத்தில் முயற்சி செய்யக்கூடிய அனைவரும் அசுர சம்பிரதாயத்தினர் ஆவர். உண்மையில் முயற்சி செய்ய வைக்கக்கூடிய ஒருவர் வேண்டும். உண்மையான முயற்சி (புருஷார்த்தம்) ஒரே ஒரு கள்ளங்கபடமற்ற தந்தை தான் செய்விக்கிறார். எல்லைக்குட்பட்ட லௌகீக தாய், தந்தை, ஆசிரியர் அனைவரும் எல்லைக்குட் பட்ட முயற்சி செய்விக்கிறார்கள். எல்லைக்கப்பாற்பட்ட ஞானத்தை யாரும் கொடுக்க முடியாது. யாரேனும் வக்கீல், நீதிபதியாக ஆகிறார்கள் என்றாலும் அடுத்த பிறவி யிலும் அப்படியே ஆக அவர்கள் மீண்டும் முயற்சி செய்ய வேண்டி இருக்கும். வக்கீலாகவே நிலையாக இருந்து விடமாட்டார்கள். அவர்கள் எதிர் காலத்துக்கு பலனடையும் படியாக எதையும் செய்வதில்லை. பிறகு அடுத்த பிறவியில் படிப்பதற்காக குருவிடம் செல்ல வேண்டி இருக்கும். கள்ளங்கபடமற்ற பாபா சத்குருவாக இருக்கிறார். சத்குரு எப்போதும் சத்தியத்தையே பேசுகிறார். அவர் தான் வந்து சத்தியமான கதையைச் சொல்கிறார். இது சத்குருவின் வழி ஆகும். இதன் மூலம் முக்தி ஜீவன் முக்தி கிடைக்கிறது. இது நரனிலிருந்து நாராயணன் ஆக்கு வதற்கான வழி ஆகும். கள்ளங்கபடமற்ற பாபா வருவது-போவதின் ரகசியம், ஆதி-மத்திம-அந்திமத்தின் ரகசியத்தை அமர்ந்து புரிய வைக்கிறார். வேறு யாரும் முக்திதாமம் மற்றும் ஜீவன் முக்தி தாமத்தைப் (சொர்க்கத்தை) பற்றி அறிவதே இல்லை. முக்தி தாமத்தின் எஜமானர் பரந்தாமத்தில் இருக்கக்கூடிய பரமபிதா பரமாத்மா ஆவார். இப்போது குழந்தைகளுக்கு வழி கிடைக்கிறது. இவர் தந்தை-

ஆசிரியர்-குருவாக இருக்கிறார் என்று பாபா பலமுறை புரிய வைத்திருக்கிறார். ஒருவேளை கிருஷ்ணர் பகவானாக இருந்தார் என்றால், அவர் முரளி (புல்லாங்குழல்) மட்டும் வாசித்தாரா என்ன? ஸ்ரீ கிருஷ்ணரை தந்தை-ஆசிரியர்-சத்குரு என்று கூட யாரும் சொல்ல மட்டார்கள். இப்போது பாபா சத்தியமான வழியை சொல்கிறார் எனும் போது பொய்யை விட்டு விட வேண்டும். குருக்கள் துவாபர யுகத்திலிருந்து வர ஆரம்பிக் கின்றனர். சத்யுகம் திரேதா யுகத்தில் குரு இருப்பதில்லை. தாய் குரு ரூபத்தில் அமர்ந்து ஞான அமிர்தம் கொடுத்து சொர்க்கத்தை உருவாக்குகிறார். பிறகு அங்கே (சொர்க்கத்தில்) குருவிற்கான அவசியம் இருப்பதில்லை. இப்போது பாருங்கள்-குழந்தைகளாகிய உங்களுக்கு எவ்வளவு நல்ல வழி கொடுக்கிறேன்! '5 விகாரங்களின் மீது வெற்றி அடையுங்கள், பிறகு ஸ்ரீ கிருஷ்ணருக்குச் சமமாக தேவதை ஆகுங்கள்' என்று அனைவரையும் பாபா யுத்த மைதானத் தில் நிறுத்தி இருக்கிறார். நாம் தெரிந்திருக்கின்றோம்--இந்த ஸ்ரீ கிருஷ்ணர் மாயையை வென்றவராகி உலகை வென்றவர் அதாவது உலகத்தின் இளவரசன் ஆனார் (ஸ்ரீ கிருஷ்ணர் படத்தை கையில் எடுத்து புரிய வைக்கிறார்) நாம் யுத்த மைதானத்தில் இருக்கிறோம் என்று குழந்தைகளாகிய உங்களுக்குத் தெரியும். மாயையை வென்றவர் உலகை வென்றவர் (மாயாஜீத்-ஜகத்ஜீத்) ஆக வேண்டும். கிருஷ்ணர் நாராயணர் ஆவதின் கூடவே முழுமையான ராஜதானியும் உருவாகின்றது என்றால் அவர்கள் அனைவரும் கண்டிப்பாக யுத்த மைதானத்தில் இருந்து மாயையின் மீது வெற்றி அடைந்திருக்க வேண்டும். 5000 வருடங்களுக்கு முன்பு இந்த ஸ்ரீ கிருஷ்ணர் கூட தன்னுடைய கடைசிப் பிறவியில் யுத்த மைதானத்தில் தான் இருந்தார். அதேபோல இப்போது இவரும் (பிரம்மா) யுத்த மைதானத்தில் இருக்கிறார். நீங்களும் யுத்த மைதானத்தில் இருக்கிறீர்கள். 5 விகாரங்களின் மீது வெற்றி அடைந்து நீங்கள் இப்படி ஆக வேண்டும். இதற்குத் தான் நாராயணி நஷா (நாராயணன் ஆகப்போகிறேன் என்ற மகிழ்ச்சி) என்று சொல்லப்படுகிறது. மாயையை வென்றவர் உலகை வென்றவர் ஆக வேண்டும். இது எவ்வளவு சகஜமான விசயம்! ஒரே ஒரு திரௌபதி மட்டும் அல்ல. அனைத்து மாதர்களும் திரௌபதிகளாக உள்ளனர். அனைவரையும் சத்யுகத்தில் இம்சை அடைவதிலிருந்து காப்பாற்று கிறார். அங்கே யாரும் விகாரத்தில் போவதில்லை. மனிதர்கள் சொல்வார்கள்-- அப்படியானால் குழந்தைகள் எப்படிப் பிறக்கும்! அதுவோ தூய்மையான உலகம் ஆகும். சன்னியாசி மக்கள் வீடுவாசலைத் துறந்து செல்வதனால் உலகமே முடிந்து போய்விடுகிறதா என்ன? உலக மக்கள் தொகை அதிகரித்துக் கொண்டே போகிறது. தூய்மை நல்லது என்று சன்னியாசிகள் தெரிந்திருக்கிறார்கள். விகாரங்களை சன்னியாசம் செய்வது நல்லது. சன்னியாசம் செய்பவர் களிடம் சன்னியாசம் செய்யாதவர்கள் தலைவணங்கி அவர்களை குரு ஆக்கிவிடுகிறார்கள். இங்கே உண்மையான சத்குரு மூலம் இந்த மாதர்கள் குரு ஆகிவிடுகின்றனர். அவர்களின் வெற்றி மாலை தான் உருவாக்கப்பட்டுள்ளது. பாபா சொல்கிறார்- நீங்கள் படித்து பதவி அடையுங்கள். இப்போது பாபா நம்மை ஸ்ரீ கிருஷ்ணரைப் போல ஆக்குவதற்காக யுத்த மைதானத்தில் நிறுத்தி இருக்கிறார். அவருடைய (ஸ்ரீ கிருஷ்ணருடைய) முழு ராஜதானியும் உள்ளது. அந்த ராஜதானியில் இளவரசன்-இளவரசியாக ஆவார்கள் அல்லவா! இப்போது ராஜா-மஹாராஜா என்றோ இளவரசன்-இளவரசி என்றோ சொல்ல முடியாது. இப்போது உங்களுக்கு பாபாவின் தெய்வீக வழி கிடைக்கிறது. இப்போது மாதர்களுக்கு ஞானக்கலசம் கிடைத்துள்ளது. இந்தக் குழந்தைகள் அமிர்தம்

பருக வைத்து அசுரர்களை தேவதை ஆக்குகின்றனர். தேவதை கள் பழைய உலகத்தின் மீது இராஜ்யம் செய்ய மாட்டார்கள். புதிய உலகம் கூட உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆகையால் குழந்தைகள் வேக வேகமாக தயாராகுங்கள். ஒன்று விகாரங்களின் பந்தனம் மற்றொன்று கர்மபந்தனம் ஆகும். அதனின்று விடுபட ஸ்ரீமத்படி நடக்க வேண்டும். பாபா சொல்கிறார்: என்னை நினைவு செய்து அசரீரி ஆகுங்கள். ஆத்மா பரமாத்மா வோடு சேர்ந்து ஒன்றாகி விடுகிறது என்பது கிடையாது. ஜோதி ஜோதியோடு ஐக்கியமாவது மில்லை, ஜோதியில் நுழைவதுமில்லை. ஆத்மா ஐக்கியமாகிவிட்டால் ஜடமாகி (உயிரற்றதாகி) விடுகிறது. ஆத்மா அழியாதது, சரீரம் அழியக்கூடியது என்று சொல்லப்படுகிறது. ஆத்மா என்னோடு யோகம் செலுத்துவதன் மூலம் தூய்மை ஆகிறது. பிறகு சரீரமும் தூய்மையாகக் கிடைக்கும். ஆத்மா தூய்மையாகிவிட்டால் இந்த சரீரம் முடிந்து போய் விடும். பிறகு தூய்மையான தத்துவங்களின் மூலம் தூய்மையான சரீரம் உருவாகும். இந்த சரீரம் பூஜைக்கு தகுதியானதாக இல்லை. தேவதைகள் மட்டும் தான் பூஜைக்குத் தகுதியானவர்கள் ஆவர். அவர்கள் மீது மலர்களைத் தூவ முடியும். அவர்களை ஸ்ரீ ஸ்ரீ அதாவது சிறந்ததிலும் சிறந்த என்று சொல்லப்படுகிறது. 'ஸ்ரீ ஸ்ரீ' என்று இருமுறை ஏன் சொல்கிறோம்? ஏனெனில் சூர்யவம்சி யான லக்ஷ்மி நாராயணர் உயர்ந்ததிலும் உயர்ந்தவர்கள். அவர்களுடைய ஆத்மா சரீரம் இரண்டும் தூய்மையாக இருக்கிறது. அவர்களைத் தான் 16 கலைகள் சம்பூர்ணமானவர்கள் என்று சொல்ல முடியும். சந்திர வம்சத்தினர் 14 கலைகள் நிறைந்தவர்கள், ஆக அவர்களை 'ஸ்ரீ' என்று மட்டும் சொல்வோம். லக்ஷ்மி நாராயணருக்கு உயர்ந்த பட்டம் கிடைக்கிறது. ஸ்ரீ ஸ்ரீ லக்ஷ்மி, ஸ்ரீ ஸ்ரீ நாராயணன். அவர்கள் மஹாராஜா-மஹாராணி மற்றும் இராமர்-சீதை ராஜா ராணி ஆவர். வரிசைக்கிரமமாக யார் எப்படி ஆகின்றார்களோ, அவர்களுக்கு அப்படியே பட்டமும் கிடைக்கிறது. இங்கே கூட மஹாராஜாக்கள் மற்றும் ராஜாக்கள் உள்ளனர். பெரியவர் மஹாராஜா என்று அழைக்கப்படுகிறார். ராஜாக்கள் மஹாராஜாக்கள் முன்பு தலை வணங்கு கின்றனர். முதலில் மஹாராஜா வருகிறார், பின்னால் ராஜா வருகிறார். ஆக இப்போது ஸ்ரீமத் படி நடக்க வேண்டும். ஸ்ரீ ஸ்ரீ ஜகத் குரு (பாபா) என்று அழைக்கப்படுகிறார். ருத்திர மாலை கூட இருக்கிறதல்லவா! உலகத்தின் எஜமானர் கூட அவர் தான். ஆசிரியரும், குருவும் அவர் தான் ஆவார். அப்படிப்பட்ட பாபாவை நினைவு செய்ய வேண்டும். பந்தனத்திலிருந்து விடுவியுங்கள் என்று சொல்கிறார்கள். பகவான் சொல்கிறார், இப்போது நான் உங்களை அழைத்துச் செல்ல வந்துள்ளேன், நீங்கள் என் விரலை மட்டும் பிடித்துக் கொள்ளுங்கள். அவர் என்ன சொல்கிறாரோ அப்படியே செய்யுங்கள். கண்டிப்பாக தூய்மை ஆக வேண்டும். இந்த சுடு காட்டில் நினைவு செய்ய என்ன இருக்கிறது! இங்கே தான் இருக்க வேண்டும், ஆயினும் புத்தி யோகத்தை மட்டும் அங்கே (புது உலகத்தின் பக்கம்) செலுத்த வேண்டும். இதைத் தான் சாந்திதாமம் மற்றும் சுகதாமத்தை நினைவு செய்வது என்று சொல்லப்படுகிறது. மோஹத்தை விலக்கியவராகவும் (நஷ்டமோஹா) ஆக வேண்டும். அவர் பதிகளுக்கெல்லாம் பதி, தந்தையருக்கெல்லாம் தந்தை, குருக்களுக்கெல்லாம் குரு ஆவார். ஆக ஸ்ரீ கிருஷ்ணரைப் போல ஆவதற்கு முயற்சி செய்ய வேண்டும். கல்பத்திற்கு முன்பும் முயற்சி செய்திருந்தனர், சத்யுகத்தின் ராஜாங்கம் ஸ்தாபனை ஆகி இருந்தது, மீண்டும் ஆகிக் கொண்டிருக்கிறது. இதற்கு தூய்மையாக இருக்க வேண்டும். கணவர் சொல்லக்கூடிய சேவையை நீங்கள் செய்யுங்கள், மற்றபடி தூய்மையாக

மட்டும் இருங்கள். தூய்மையாகவில்லையானால் வைகுண்டத்தின் எஜமானர் ஆக முடியாது. இப்போது பாபா வந்து குழந்தைகளாகிய உங்களை சொர்க்கவாசி ஆக்குகின்றார். அவரே தூய்மை யற்றவர்களை தூய்மையாக்குபவரும் உலகத்தின் எஜமானரும் ஆவார்.

இப்போது குழந்தைகளாகிய நீங்கள் ஞானச் செல்வத்தின் மூலம் மனிதர்களை தேவதை ஆக்குங்கள். இது ஞானம் ஆகும். புத்தியில் எவ்வளவு பிரகாசம் வந்து விட்டது! உலகத்தில் வேறு யாருக்கும் இந்த ஞானம் கிடையாது. அனைவரும் பல இடங்களில் அலைந்து திரிந்து ஏமாற்றமடைந்து கொண்டே இருக்கின்றனர். இங்கே பாபா நம்மை எவ்வளவு அமைதியில் அமர வைத்திருக்கிறார். பாபா சொல்கிறார்: இறக்கும் நிலையில் இருந்தாலும் கூட அமர்ந்து கேளுங்கள். வாயில் ஞான அமிர்தம் இருக்க, சிவபாபாவின் நினைவில் இருக்கும் போது உயிர் உடலை விட்டுப் பிரியட்டும். பிறகு கடைசி நேரத்தில் புத்தியில் என்ன உள்ளதோ, அதன் படியே அடுத்த பிறவியின் நிலை (அந்த்மதி சோகதி) ஆகிவிடும். இல்லையானால் பாவ கர்மங்களை அழிக்க முடியாது, மோஹத்தை வென்றவர் ஆக முடியாது. பக்தியின் பலனை (ஞானத்தை) வீணாக இழந்து விடுவார்கள். அனைத்து பக்தர்களும் மாயையின் பிடியில் மாட்டிக் கொண்டி ருக்கின்றனர். அவர்களைக் காக்கக்கூடியவர் கள்ளங்கபடமற்ற சிவபாபா. நம்மைப் பாதுகாக்க வந்துள்ள போது, அவரின் வழிப்படி நடக்க வேண்டும். ஸ்ரீ கிருஷ்ணரின் குலத்தில் செல்ல வேண்டும். ஸ்ரீ கிருஷ்ணர் முழு தேர்ச்சி அடைந்தவர், அதாவது முழு நிலவாக இருக்கிறார். எப்போது சந்திரவம்சத்தினரின் காலம் வருமோ, அப்போது அவர்கள் தன்னுடைய இராஜ்யத்தை எடுத்துக் கொள்கிறார்கள். பிறகு ஏன் தேர்வில் தோல்வி அடைய வேண்டும்! முழு தேர்ச்சி அடைய முயற்சி செய்யுங்கள். இதில் பயப்படுவதற்கான அவசியம் கிடையாது. பயமற்றவராக வெறுப்பற்றவராக ஆக வேண்டும். இதைப் புரிய வைக்க வேண்டியிருக்கிறது அல்லவா! பகவானை சர்வவியாபி என்று யார் சொல்கிறார்களோ, அவர்கள் தான் பாரதத்தை இப்படிப்பட்ட கீழான நிலைக்கு கொண்டு வந்துவிட்டனர். பகவான் என்பவர் கள்ளங்கபட மற்றவர் ஒரே ஒருவர் தான். அவரே பக்தர்களைக் காக்கக்கூடியவர் ஆவார். பூஜைக்குரிய கிருஷ்ணர் இப்போது பூஜாரி ஆகிவிட்டார். இப்போது கிருஷ்ணரின் ஆத்மா இங்கே தான் இருக்கிறது. இப்போது கொஞ்சம் புரிந்து கொள்ளுங்கள். இது மிகப்பெரிய லாட்டரி ஆகும். இது குதிரைப் பந்தயமாகவும் இருக்கிறது. நாம் புத்தியோகத்தின் மூலம் ஓட வேண்டும். நாம் எவ்வளவு வேகமாக ஓடுகிறோமோ, அவ்வளவு வேகமாக பாபாவை அடைந்து விடுவோம். பாவ கர்மங்கள் அழிந்து போய்விடும். நாம் யுத்த மைதானத்தில் நின்று கொண்டிருக்கிறோம் என்று பாபா நமக்கு பலமுறை புரிய வைத்துள்ளார். மனிதர்கள் சொல்வார்கள் - முழு உலகத்தின் மீது வெற்றி அடைய ஆயுதங்கள் போன்றவை எங்கே இருக்கிறது (பாபா நடித்துக் காட்டுகிறார்). நாம் புத்தியோகத்தின் பலத்தினால் மாயையை வென்றவர்-உலகத்தை வென்றவர் ஆகிக் கொண்டிருக்கிறோம். நாம் யோகத்தில் அமர்ந்திருக்கிறோம், அதாவது சிவபாபாவின் நினைவில் இருக்கிறோம். புத்தி அங்கே மூழ்கிக் கிடக்கிறது. பதிகளுக்கெல்லாம் பதி சொல்கிறார்- பதிவிரதை ஆக வேண்டும், வேறு யாரையும் நினைவு செய்யக் கூடாது. யோகம் செய்து செய்து பரிபக்குவ நிலையை அடைய வேண்டும். கன்னிகை கூட பதியை (கணவரை) நினைவு செய்கிறாள் அல்லவா! அவரோ தேகதாரி, பரமாத்மா அசரீரி ஆவார். அவரை

புத்தி மூலம் தான் நினைவு செய்ய முடியும். தேக அபிமானத்தை விடுத்து ஆத்ம அபிமானி ஆகிவிடுவீர்கள். புத்தியில் சக்கரம் சுற்றிக் கொண்டே இருக்கிறது. நாம் நம்முடைய சொர்க்கதாமத்திற்கு கண்டிப்பாக வருவோம். சூர்யவம்சி, சந்திரவம்சி பிறகு வைசிய, சூத்திர வம்சத்தினர் ஆவீர்கள். பிறகு பாபா வந்து சூத்திரனிலிருந்து பிராமணன் ஆக்குவார். இப்படியாக தனக்குத் தானே பேசிக் கொள்ள வேண்டும். குழந்தைகள் (பூங்கா) பூந்தோட்டங்களுக்குச் சென்று படிக்கிறார்கள். நீங்களும் ஏகாந்தத்தில் (தனிமையில்) அமர்ந்து சிவபாபாவை நினைவு செய்யுங்கள். நம்முடைய பழைய கணக்கு வழக்கு முடிந்து விடும். பிறகு நாம் இராஜ்யம் செய்வோம். இப்போது நாம் யுத்த மைதானத்தில் இருக்கிறோம். பிறகு நாம் பாரதத்தில் நிலையான அழியாத சுகம் சாந்தியின் இராஜ்யம் செய்வோம். நாம் அனைவரும் யுத்த மைதானத்தில் இருக்கிறோம் முழுமையான யோகபலத்திற்கான விசயமாகும். இதில் எந்த கஷ்டமும் கிடையாது. பாபாவின் ஸ்ரீமத்படி மட்டும் நடக்க வேண்டும். பிறகு தானாகவே இராஜ்யத்திற் கான திலகம் கிடைத்து விடும். வரதானம் கூட நீண்டஆயுள் உடையவராகுக! குழந்தைப்பேறு உடையவராகுக! என்று கிடைத்து விடுகிறது. அங்கே (சொர்க்கத்தில்) செல்வம் ஆகிய அனைத்தும் அளவுகடந்ததாக இருக்கிறது. குழந்தை பிறக்கப் போகிறது என்று முன்பே சாட்சாத்காரம் ஏற்பட்டு விடுகிறது. அங்கே முகத்தில் அன்பு நிறைந்திருக்கும். விகாரத்தின் விசயமே கிடையாது. அது நிர்விகாரி உலகம் ஆகும். ஸ்ரீ கிருஷ்ணரைப் பாருங்கள்--எவ்வளவு முதல்தரமானவர், இனிமையானவராக இருக்கிறார். இப்போது அப்படி ஆக வேண்டும். நீங்கள் பட்டத்து ராணி ஆக வேண்டும். மீரா பஜனை பாடினார், அவ்வளவு தான். ஆனால் மீராவுக்கு பகவான் கிடைக்கவில்லை. அதுவோ பக்தி மார்க்கம் ஆகும். இப்போது மீரா கூட எங்கேயோ இருக்கிறாள். ஒருவேளை உறுதியான பக்தையாக இருந்தால், அவள் கூட ஞானம் எடுத்திருக்க வேண்டும். நாம் கூட துவாபர யுகத்திலிருந்து பக்தி செய்து கொண்டே வந்தோமல்லவா! 'சிவபாபா நான் உங்களுடையவன். உங்களிடமிருந்து முழு ஆஸ்தி எடுப்பேன். நான் உங்கள் மீது பலியாகின்றேன்' என்று புத்தியில் புரிந்து கொள்ள வேண்டும். அப்போது பாபா கூட 21 முறை (பிறவிகள்) பலியாவார். நாம் பலி ஆகாமல் மாற்றந்தாய் குழந்தையாகி விட்டால், 21 முறை பிரஜையாக வருவோம். பாபா சொல்கிறார்--நீங்கள் என்னை நினைவு செய்தீர்களானால், நான் உதவியும் செய்வேன். உதவி கூட தன்னுடைய குழந்தைகளுக்குத் தான் செய்வார்கள், மற்றவர்களுக்கு ஏன் உதவி செய்ய வேண்டும்! நல்லது

இனிமையிலும் இனிமையான செல்லமான குழந்தைகளுக்கு தாய் தந்தை பாப்தாதாவின் அன்பும், நினைவும் காலை வணக்கமும் உரித்தாகுக. ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் வணக்கம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. மாயை மீது வெற்றி அடைந்து நாம் ஸ்ரீ கிருஷ்ணரைப் போல உலகை வென்றவர் ஆக வேண்டு இந்த யுத்த மைதானத்தில் எப்போதும் வெற்றியாளர் ஆக வேண்டும். தோல்வி அடையக் கூடாது.

2. ஸ்ரீமத் படி தன்னை விகாரங்களின் பந்தனம், கர்ம பந்தனத்திலிருந்து விடுவித்துக் கொள்ள வேண்டும். அசரீரி ஆவதற்கான பயிற்சி செய்ய

வேண்டும். புத்தியோகத்தின் மூலம் ஓட வேண்டும்.

வரதானம் : முகத்தின் மூலமாக நிறைந்த நிலையின் (ஜலக்) பிரகாசம் மற்றும் (ஃபலக்) பெருமிதத்தை காண்பிக்கக் கூடிய அனைத்து பிராப்திகளின் சொரூபம் ஆவீர்களாக.

சங்கமயுக பிராமண வாழ்க்கையின் விசேஷ்த் தன்மையாவது - எப்பொழுதும் சுகத்தின், அமைதியின், மகிழ்ச்சியின், ஞானத்தின் மற்றும் ஆனந்தத்தின் ஊஞ்சலில் ஊஞ்சலாடுவது. அனைத்து பிராப்திகளில் நிறைந்த சொரூபத்தின் அழியாத போதையில் நிலைத்திருப்பது. பிராப்தியே பிராப்தி இருக்கின்றது என்ற அந்த நிறைந்த நிலையின் (ஜலக்) பிரகாசமும் (ஃபலக்) பெருமிதமும் முகத்தில் தென்பட வேண்டும். எப்படி ஸ்தூல செல்வத்தில் நிறைந்திருக்கும் இராஜாக்களின் முகங்களில் கூட அந்த பிரகாசம் இருந்தது. இங்கோ அழியாத பிராப்தி ஆகும். எனவே பிராப்திகளின் ஆன்மீக பிரகாசமும் (ஜலக்) பெருமிதமும் (ஃபலக்) முகத்தில் தென்பட வேண்டும்.

சுலோகன்: யார் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருந்து மகிழ்ச்சியின் பொக்கிஷத்தை பகிர்ந்தளித்துக் கொண்டே இருப்பார்களோ, அவர்களே குஷி என்ற அதிர்ஷ்டம் உடைய அதிர்ஷ்டசாலி ஆவார்கள்.